# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 03.08.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 4867/SCIC/2024**

திரு.B. விஜயகுமார் - புகார்தாரர்
எண்.14/15, சால்ட் குறுக்கு தெரு
துர்க்காதேவி நகர், தண்டையார்பேட்டை
சென்னை-600 081,
Phone:97899 34044.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
முதுநிலை வரைவாளர்
சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்
தாளமுத்து நடராஜன் மாளிகை
எண்.1, காந்தி இர்வின் ரோடு
எழும்பூர், சென்னை - 600 008.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **14.05.2024** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 16.07.2024 |
| 3. | மனுதாரரின் புகார் மனு | 07.10.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 14/05/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், எழும்பூர், சென்னை-8 அவர்களுக்கு அனுப்பி, அதில் “சென்னை இராயப்பேட்டை, வெஸ்ட் கோட் ரோடு, கேசரி குட்டிராம் அபார்ட்மெண்ட், புதிய கதவு எண்.22, பழைய கதவு எண்.27 என்ற விலாசத்தில் திரு.R.ரவி கிருஷ்ணன் என்பவரால் கட்டி முடிக்கப்பட்ட எட்டு மாடி அனுமதியற்ற / விதிமீறல் புதிய கட்டிட கட்டுமானங்களுக்கு கட்டிட திட்ட அனுமதி (Building

plan permission) எப்போது எந்த அரசு அமைப்பால் கொடுக்கப்பட்டது மற்றும் திட்ட அனுமதி எண். ஆகிய தகவல்களை தர வேண்டுகிறேன்" என்பன போன்று 6 (ஆறு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (03/08/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.B.விஜயகுமார் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி.ம.நிர்மலாதேவி, துணை திட்ட அமைப்பாளர், முதுநிலை திட்ட அமைப்பாளர் (பொ), சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்கள் ஆஜராகி, தான் 31/07/2026 தேதியிட்ட இனவாரியான தகவல்களைக் கொண்டு வந்திருப்பதாகத் தெரிவித்து, அதனை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மனுதாரரின் பிரிவு 6(1)-ல் கோரிய இனங்கள் 1, 2-க்கு சம்பந்தப்பட்ட கோப்பு அழிக்கப்பட்டுவிட்டதால் தகவல் அளிக்க இயலவில்லை என்றும் இனம் 3-லிருந்து 6 வரையிலுமானவற்றிற்கு சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், அமலாக்கப் பிரிவு தகவல்களை அளிக்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. **எனவே, பொதுத் தகவல் அலுவலர்/ துணை திட்ட அமைப்பாளர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்கள், 31/07/2026 தேதியிட்ட தகவல்களை மனுதாரருக்கு விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, மேற்குறிப்பிட்ட இனங்கள் 3-லிருந்து 6 வரையிலான தகவல்களை அமலாக்கப் பிரிவிலிருந்து பெற்று அதனையும் 31/08/2026-க்குள் மனுதாரருக்கு விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, அதன் நகலினை ஆணையத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மேற்கண்ட உத்தரவுகளுடன், இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 4867/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
முதுநிலை வரைவாளர்
சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்
தாளமுத்து நடராஜன் மாளிகை
எண்.1, காந்தி இர்வின் ரோடு
எழும்பூர், சென்னை - 600 008.

**புகார்தாரர்**

திரு.B. விஜயகுமார்
எண்.14/15, சால்ட் குறுக்கு தெரு
துர்க்காதேவி நகர், தண்டையார்பேட்டை
சென்னை-600 081,
Phone:97899 34044.

RG/Sr.PC